
## திராவிடத்தால் வாழ்கிறோம்

1212

எழுத்து: கோவி.லெனின்

ஓவியம்: கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

## இது பெரியார் மண்

ர.பிரகாசு

62

பகுத்தறிவுக் கொள்கைகளை முழுமையாகக் கடைப்பிடிக்கும் ஊர்களைப் பற்றிய பதிவாக ஒரு தொடர்.



1904-இல் தொடங்கப்பட்ட தாயம்மாள் பெண்கள் பள்ளி

# கல்வி வளர்த்த கழக நாயகம்!

“கண்ணை மூடிக்கொண்டு, பெரியாரைப் பின்பற்றியவர் இவர். பெரியாருக்கும் அவருக்கும் எந்த விஷயத்திலும் ஒன்று போலவே கருத்து உதிக்கும். பெரியார் கருத்தைச் சொல்லிவிட்டால், பெரியாருக்கு மேலாக அதை விளக்கிச் சொல்லுவார். அதற்கு ஆதாரங்கள் விநாடியில் சேகரித்து விடுவார். எந்தப் பதவியும் உத்தியோகமும் செய்யும் தொண்டும் தமிழ் மக்களுக்குப் பயன்படுத்தப்பட முடியாவிட்டால், அது எவ்வளவு பெரிதாயினும் திரும்பிப் பாரார். மிகவும் கண்ணியமானவர். வேஷத்துக்கு என்று நடக்கும் காரியம் அவரிடம் இருந்ததில்லை” என்று 16.12.1944-இல் குடி அரசு இதழில், பாராட்டப்பட்ட பெரியார் பெருந்தொண்டர் செ.தெ.நாயகம்.

தான் சென்ற ஊரையெல்லாம், வாழ்ந்த பகுதியையெல்லாம் பெரியார் மண்ணாக ஆக்கிட பாடுபட்ட பகுத்தறிவாளர் அவர். அன்றைய நெல்லை மாவட்டம்- இன்றைய தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள குல சேகரப்பட்டினத்தை அடுத்த செட்டிகுளத்தில் நெல்லை நாயகம்- வள்ளியம்மை இணையருக்கு 07.10.1878-இல் பிறந்தவர் செ.தெ.நாயகம். குலசேகரப்பட்டினத்தில் உள்ள பள்ளியில் 12 வயது வரையும், பின்னர் பள்ளி இறுதி வகுப்பு வரை பாளையங்கோட்டையிலும் படித்தார். தாயம்மாள் என்பவரை மணம் முடித்து, 1901-ஆம் ஆண்டில் பெண் குழந்தை பிறந்த நிலையில், அடுத்த சில மாதங்களிலேயே தாயம்மாள் நோய்வாய்ப்பட்டு இறந்து போனார்.



செ.தெ.நாயகம்

குடும்பத்தினர், பெரியோர்களின் வற்புறுத்தலில் அடுத்த ஆண்டில் தமிழ்ப்புலவர் இ.பொ.ஈசுவரமூர்த்தியின் மகள் சிதம்பரவடிவு அம்மையாரை மணம் முடித்தார்.

கல்விப்பணியில் இருந்துதான் அவரது பொதுச்சேவை தொடங்கியது. தாயம்மாளின் நினைவாக, 1904-ஆம் ஆண்டில் குலசேகரப் பட்டினத்தில் பெண்கள் பள்ளியைத் தொடங்கினார். அப்போது அவருக்கு வயது 26. எளிய மக்களின் கல்விக்காக கட்டணம் இல்லாமல், உணவு கொடுத்தும் இந்த சேவையை புரிந்தார். அதன்பிறகு, தன் தாய் வள்ளியம்மையார் பெயரில், ‘சிறார் இல்லம்’ ஒன்றைத் தொடங்கினார். வெளியூரில் இருந்து மாணவிகள் வந்து தங்கிப்படிக்க, இந்த சிறார் இல்லம் அன்றைக்குப் பேருதவி புரிந்தது. அதிலும் குறிப்பாக உணவு, கல்வி, இருப்பிடம் என அனைத்துமே இலவசமாக அங்கு வழங்கப்பட்டன.

1909-இல் சென்னை எழும்பூருக்குக் குடிபெயர்ந்த நாயகம் ஆசிரியர் பயிற்சி முடித்து, சென்னையிலேயே பணியாற்றத் தொடங்கினார். அந்தக் காலத்தில் புகழ்பெற்ற கல்வி நிறுவனங்களில் கூட ஒடுக்கப்பட்ட மக்களுக்கு இடம் மறுக்கப்பட்டதைக் கண்டு வேதனையடைந்த நாயகம், 1933-இல் ‘தியாகராய நகர் பள்ளி’யைத் தொடங்கினார். குலசேகரப்பட்டினத்தில் மனைவி பெயரிலும், தாய் பெயரிலும் பள்ளியைத் தொடங்கியவர், சென்னையில் நீதிக்கட்சித் தலைவர் தியாகராயர் பெயரில் உருவான ஊரில், அந்தப் பெயரிலேயே பள்ளியைத் தொடங்கினார். அதுவும் ஒடுக்கப்பட்ட மக்களின் கல்வி உரிமைகள் பறிபோவதைக் கண்டு வெகுண்டெழுந்து தொடங்கினார். ஏனெனில், அப்போது அவர் நீதிக்கட்சியின் கொள்கைகளால் வெகுவாக ஈர்க்கப்பட்டு, அரசியல்மயமாகி யிருந்தார். இங்கும் ‘தியாகராயர் இல்லம்’ ஒன்றைத் தொடங்கி, மாணவர்களுக்கு உணவு மற்றும் இருப்பிடத்தை இலவசமாக வழங்கினார்.

ஆச்சரியம் என்னவெனில், தாயம்மாள் நடுநிலைப்பள்ளி, வள்ளியம்மை மேல்நிலைப் பள்ளி, தியாகராய நகர் பள்ளி, வள்ளியம்மை கல்லூரி என செ.தெ.நாயகம் 120 ஆண்டுகளுக்கு முன் விதைத்த விதைகள் யாவும், ஆலமரமாக வளர்ந்திருக்கின்றன. அதன் கல்விச்சேவைகள் இன்றும் தொடர்ந்துகொண்டிருக்கின்றன. கல்விச்சேவை மட்டும் அவருடைய வரலாறு அல்ல. நீதிக்கட்சியின் மூலம் பெரியாரோடு நட்பை வளர்த்து, அரசியல் களத்திலும் தவிர்க்க முடியாத பங்காற்றியுள்ளார் செ.தெ.நாயகம்.

...பயணம் தொடரும்

## தேன்கூட்டில் கை வைக்கிறது, த.வெ.க. அரசு!

“பல்கலைக்கழகங்களில் வேந்தராக முதலமைச்சரே இருக்க வேண்டும் என்ற தி.மு.க. அரசின் நிலைப்பாட்டைப் பின்பற்ற வேண்டியதில்லை என உயர்கல்வித்துறை அமைச்சர் விஸ்வநாதன் கூறியிருப்பது, மாநில உரிமைகளுக்காகத் தமிழ்நாடு போராடிப் பெற்றதைக் கைவிடுவது மட்டுமல்ல, உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பையும் அவமதிப்பதாகும்” எனக் கழகத்தின் மாணவர் அணி இணைச் செயலாளர் தமிழ் கா.அமுதரசன் முகநூலில் தனது கண்டனத்தைப் பதிவு செய்துள்ளார்.

அவரது பதிவில், “முந்தைய தமிழ்நாடு அரசு இயற்றிய சட்டத்தின்படி, ‘முதல்வர் - வேந்தர் அல்ல. துணை வேந்தரை நியமிப்பது - ஆளுநர்’ என்று இருந்ததை, ‘தமிழ்நாடு அரசு’ என்று திருத்தினார்கள். அதாவது, துணை வேந்தரை நியமிக்கும் அதிகாரத்தை, ஆளுநரிடம் இருந்து தமிழ்நாடு அரசு எடுத்துக்கொண்டது.

கூடுதலாக, துணை வேந்தரை பதவியில் இருந்து நீக்கும் அதிகாரத்தை, தமிழ்நாடு அரசுக்கு அளித்து புதிய பிரிவும் சேர்க்கப்பட்டது. இதுவே சட்டம். முதல்வர், வேந்தர் ஆக்கப்படவில்லை. வேந்தரின் அதிகாரத்தை, தமிழ்நாடு அரசு பெற்றதால், அதன் தலைமையாகிய முதலமைச்சர், வேந்தரின் அதிகாரம் பெறுவதாக வேண்டுமானால் பொருள் கொள்ளலாம்.

அடிப்படை எதுவும் தெரியாமல், உரிமைகளை மீண்டும் ஆளுநர் கைகளுக்குச் செல்ல அனுமதித்தல் என்பது நியாயம் ஆகாது. தமிழ்நாட்டிற்குச் செய்யும் துரோகம். மாநில உரிமைகளைக் காலில் போட்டு மிதிப்பதில், பா.ஜ.க.வை விஞ்சி நிற்கிறது த.வெ.க. அரசு. இது, தேசியப் பெருமை பேசும் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த விஸ்வநாதன் கருத்தா? இல்லை, விஜய் அமைச்சரவையில், அவரின் கீழ் உள்ள உயர்கல்வித்துறை அமைச்சரின் கருத்தா?

எது எப்படி ஆகினும், போராடிப் பெற்ற மாநில உரிமைகளைத் தூக்கி குப்பையில் போடுவதை, தமிழ்நாடு வேடிக்கை பார்த்துக்கொண்டு இருக்காது. தேன்கூட்டில் கை வைக்கிறது, த.வெ.க. அரசு. விபரீதங்களைச் சந்திக்க நேரிடும் - எச்சரிக்கை!” என்கிறது அவரது கண்டனப் பதிவு.

## ஃப்ளாஷ்பேக்



ஜி.கணேஷ்



### தொண்டனுக்கு வேறென்ன வேண்டும்?

2012-ஆம் ஆண்டு எனது பிறந்த நாளை முன்னிட்டு, கழகத் தலைவர் - முத்தமிழறிஞர் அவர்களிடம் வாழ்த்துப் பெற அண்ணா அறிவாலயம் சென்றிருந்தேன். தலைவரைப் பார்த்த மகிழ்ச்சியில், நான் அவரிடம் “உங்களைச் சந்தித்து ஒரு புகைப்படம் எடுத்துக்கொள்ள வேண்டும் என்பது, எனது லட்சியம். அது தற்போது நிறைவேறியது” என்றேன். அதற்கு அவர், “அப்படியா?” எனக்கேட்டு சிரித்தது, என் வாழ்நாளில் மறக்க முடியாதது. தலைவரிடம் பேசியது எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி அளித்தது. ஒரு சாதாரண தொண்டனுக்கு இதைவிட வேறு என்ன வேண்டும்?

**- ஜி.கணேஷ், அமைப்பாளர், பெரம்பூர் பகுதி வழக்கறிஞர் அணி, சென்னை வடக்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## பொய்ப்பெட்டி

கோவி.லெனின்

112

"கழகம் சந்திக்கும் அவதூறுகள் குறித்த வினாவும் - விடையும்..."

**த.வெ.க. கட்சி சார்பில் தேர்தலில் போட்டியிட்டவர்கள், சாதிப் பாகுபாடுகளைக் கடந்து வெற்றி பெற்றிருப்பதாகவும், அதன் அமைச்சரவையில் இதுவரை இல்லாத அளவுக்கு சமூக நீதி நிலைபெற்றிருப்பதாகவும் பெருமைப்பட்டுக் கொள்கிறார்களே?**

“இவை எல்லாம் ரீல்ஸ்தனமான பொய்கள்தான். சாதி பார்த்துதான் வேட்பாளர்களை நிறுத்தியிருக்கிறார்கள் என்பதற்கு மயிலாப்பூர், ஸ்ரீரங்கம் தொகுதிகளில் அந்தக் கட்சி நிறுத்திய வேட்பாளர்களும், வெற்றிபெற்ற அந்த இருவரையும் அமைச்சரவையில் இடம் பெறச் செய்திருப்பதுமே சாட்சிகளாகும்.

தென்மாவட்டங்கள், வடமாவட்டங்கள், மேற்கு மாவட்டங்கள் என்று எல்லா இடங்களிலும் எந்தெந்தச் சாதிகளுக்கு வாக்குவங்கி உள்ளது என்பதைப் பார்த்துதான் வேட்பாளர்களை நிறுத்தியுள்ளனர். ஒரு கட்சி எந்தச் சாதியிலிருந்து வேட்பாளர்களை நிறுத்துகிறது என்பது அதன் உரிமை சார்ந்தது. அந்தக் கட்சி ஆட்சிக்கு வரும்போது, சாதிப் பாகுபாடின்றி, தனது நிர்வாகத்தை நடத்துகிறதா, மக்களிடம் சாதி மோதல் பதற்றத்தை ஏற்படுத்தாமல் இருக்கிறதா என்பதுதான் மிக முக்கியமானது. த.வெ.க. ஆட்சியில், தலைநகர் சென்னையிலேயே சாதிப் பதற்றத்தை உருவாக்கும் வகையில், அதன் நிர்வாக அவலட்சணம் வெளிப்பட்டுள்ளது.



# சாதிப் பாகுபாடும்.. அரசின் நிலைப்பாடும்...

சென்னையில் குடிசையில் வாழ்கின்ற ஏழை-எளிய மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த, இந்தியாவிலேயே முதன்முறையாக குடிசை மாற்று வாரியத்தை உருவாக்கி, அவர்களுக்கு அடுக்குமாடிக் குடியிருப்புகளைக் கட்டித்தந்தவர் முத்தமிழறிஞர் கலைஞர். திராவிட மாடல் ஆட்சியில் இதற்கு ‘நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம்’ எனப் பெயர் மாற்றப்பட்டதுடன், நீண்டகாலமாக உள்ள பழைய குடியிருப்புகளை இடித்துவிட்டு, புதிய குடியிருப்புகளைக் கட்டும் பணி நடைபெற்றது. ஆயிரம்விளக்கு, மயிலாப்பூர், சைதாப்பேட்டை, பெரம்பூர், எழும்பூர் உள்ளிட்ட பல தொகுதிகளிலும் இந்தப் பணிகள் நடைபெற்று புதிய வீடுகள் ஒதுக்கப்பட்டன. இதில் சைதாப்பேட்டை தொகுதியில் 2,700 வீடுகள் கொண்ட குடியிருப்புகளை, முதல் அமைச்சர் பொறுப்பில் இருந்தபோது கழகத் தலைவர் திறந்து வைத்தார். தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டுவிட்டதால், வீடுகளைப் பயனாளிகளுக்கு ஒதுக்கும் பணி நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

த.வெ.க. ஆட்சி அமைந்த நிலையில், சைதாப்பேட்டை தொகுதிக்குட்பட்ட நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியக் குடியிருப்பில், வீடு ஒதுக்கீடு செய்யும் பணியை சாதிரீதியாக மேற்கொண்டிருக்கிறது த.வெ.க. அரசு. ஒரு குறிப்பிட்ட சமூகத்தினர், இன்னொரு சமூகத்தினருடன் சாதி ஏற்றத்தாழ்வுப் பார்வையில், ஒரே இடத்தில் வசிக்க மாட்டோம் என்று சொன்னதால், அவர்களுக்காக மட்டும் ஒரு ப்ளாக்கை ஒதுக்கிவிட்டு, மற்ற ப்ளாக்குகளில் குலுக்கல் முறையில் வீடுகளைத் தேர்வு செய்து பயனாளிகளுக்கு ஒதுக்கியுள்ளது த.வெ.க. அரசு நிர்வாகம். இது அப்பட்டமான சாதிப் பாகுபாடாகும். இத்தனை காலம், ஒரே குடியிருப்பில் உள்ள வெவ்வேறு ப்ளாக்குகளில் அனைத்துச் சமூகத்தினரும் ஒன்றாக வாழ்ந்து வந்த நிலையில், குறிப்பிட்ட சாதிக்காக தனி ப்ளாக் என்பது, அரசே கடைப்பிடிக்கும் தீண்டாமையாகும்.

சாதிப் பற்று-வெறி-ஆணவம் அனைத்தும் நிறைந்த ஊர்ப்பகுதிகளிலேயே அனைத்துச் சாதியினரும் ஒன்றாக வாழக்கூடிய சமத்துவபுரங்களை உருவாக்கியவர் கலைஞர். அதனை மேம்படுத்தியவர் திராவிட மாடல் ஆட்சியின் நாயகர். சாதிப் பாகுபாடு தலைகாட்டாத தலைநகர் சென்னையிலேயே சாதிப் பாகுபாட்டை உருவாக்கி, சாதி மோதல் பதற்றத்தை உருவாக்கியுள்ளது ரீல்ஸ் ஆட்சி நடத்தும் த.வெ.க. அரசு.

...வினா தொடரும்.

## கருவூலம்

### அறிவித்துவிட்டுத்தான் ‘கிளர்ச்சி’!

1954-ஆம் ஆண்டு, டிசம்பர் 6-ஆம் தேதி, சட்டமன்றக் கூட்டம் நடந்துகொண்டிருந்தபோது, செல்லப்பா என்கிற தி.மு.க. தொண்டர், தனி ஆளாக, கழகக் கொடியை ஏந்திய வண்ணம், சட்டசபை வாசலில் நின்று “ஆளுநர் சம்பளத்தைக் குறைக்க வேண்டும்” என முழக்கமிட்டார். இந்த நிகழ்ச்சி அப்பொழுது பெரும் பரபரப்பாகப் பேசப்பட்டது. சென்னை மாவட்டச் செயலாளராக இருந்த கே.எம்.கண்ணபிரான், ஆர்ப்பாட்டம் சம்பந்தமாக மறுப்பும் விளக்கமும் வெளியிட்டார். பேரறிஞர் அண்ணா வெளியிட்ட அறிக்கையில், “தி.மு.கழகம் எத்தகைய கிளர்ச்சி தொடங்குவதாக இருந்தாலும், பொதுக்குழு முடிவுக்குப் பின்னர், பொதுமக்களுக்கு முறைப்படி அறிவித்துவிட்டுத்தான் தொடங்குவோம்” என அறிவித்தார்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900